போர்வாள்

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர் வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 1 | வீச்சு 37

14—5—49 சனிக்கிழமை

உன் மனைவியிடம் உனக்குள்ள காதலை ஒரு புரோகிதன் மூலமாக நீ உன் மனைவிக்குச் செலுத்தமுடியுமா? முடியும் என்றால் நான் ஆண்டவனிடம் உனக்குள்ள காதலையும் ஒரு புரோகிதன் மூலமாக ஆண்டவனுக்குச் செலுத்த முடியும். இல்லை அது முடியாது என்றால் இதுவும் முடியாதுதான்!

H. G. வெல்ஸ்

மலானுக்கு அளித்த விருந்து!

தென்னாப்பிரிக்காவின் பிரதமர் மலான் அங்கே வாழும் இந்தியர்களுக்கு இழைத்துவரும் அநீதிகள் எண்ணற்றன. இந்தியர்களின் பிரஜா உரிமைகளைப் பறிப்பதிலேயும், அவர்களின் வாழ்க்கை வசதிகளைக் குறைப்பதிலேயும், அவர்களைச் செத்த வாழ்வு வாழச் செய்வதிலேயும் மலனுக்கு அலாதி பிரியம்! வெள்ளைத் தோல் கறுப்புத் தோலைவிட உயர்ந்தது என்பது மலானின் சித்தாந்தம்! கறுப்பர்கள் தனியாக 'சேரி' அமைத்துக்கொண்டு வாழவேண்டுமே ஒழிய வெள்ளையருடன் பொது இடங்களில் கலந்துவிடக்கூடாது என்று சட்டம் இயற்றியுள்ளார் அந்த வெள்ளைக்கார சநாதனி! இத்தகைய மகானுபாவர் மலானுக்குத்தான் சென்ற வாரம் சீமையில் விருந்தளித்துள்ளார் பண்டித நேரு. தென்னாப்பிரிக்காவில், மலானின் சர்க்கார் தங்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை எதிர்த்து அறப்போர் ஆற்றி வரும்-இந்தியர்கள் செவியில் இச்சேதி புகுந்தால் அவர்கள் மனம் என்ன பாடுபடும்? ஓவியத்தைப் பாருங்கள், பண்டிதர் மலானுக்கு அளித்த விருந்திலே எவ்வளவு நம்பிக்கைத் துரோகம் கலந்திருக்கிறது என்பது நன்கு தெரியும்.

சமயம் எனும் சூளையில் தமிழ்நாட்டில் முளையாது!

ஏன்? எப்படி? எதற்காக?

★

கேள்வியும் விடையும்

★

[சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும் தமிழகம் எங்கணும் காட்டுத் தீப்போலப் பரவிவரும் இந்நாளில் அந்த இரு இயக்கங்களின் கொள்கை—திட்டம்—நடைமுறை ஆகியவற்றைப் பற்றிய பல்வேறு ஐயங்கள் தமிழகத்தில் அங்கங்கே உலவிக் கொண்டிருப்பது இயற்கை. அந்த ஐயங்களை அகற்றுவதற்கென்றே சென்ற இரண்டு வாரங்களாக நடத்தப்பட்டு வரும் புதுப்பகுதி இது. கேள்விகள் ஏராளமாக வந்து குவிந்த வண்ணம் உள்ளன. ஆனால் போர்வாளின் அளவு சிறிது. சில கேள்விகளுக்கு மட்டுமே இந்த வாரம் விடை தரப்பட்டிருக்கின்றன பிற, பின்!]

1. திராவிடம் என்னும் சொல் வடமொழிச் சொல்லா? தமிழ் மொழிச் சொல்லா? எங்ஙனம்? விடை கூறுக.

நீர் இக் கேள்வியை பரீட்சையில் கேள்வித் தாளில் கேள்விகள் கேட்கப்படும் 'பாணியில்' தயாரித்துள்ளீர். எனவேநானும், பரீட்சையில் பள்ளி மாணவன், பதில் எழுதும் தோரணையில் என் விடையைக் கூறுகிறேன்!

இந்தக் கேள்வி இரண்டு பகுதிகளைக் கொண்டது!

முதல் பகுதிக்குப் பதில்:—இஃது வடசொல் அன்று!

தமிழ்ச் சொல்லே!

இரண்டாம் பகுதிக்குப் பதில்:— திராவிடம் என்னும் சொல் தமிழ்ச் சொல்லே என்பது யாங்ஙனம் எனின், சொற்களின் பிறப்பையும் வளர்ச்சியையும் ஆய்ந்து கூறும் மொழிநூல் வல்லார்தம் கருத்துரைகளிலிருந்து அது தெளிவாகத் தெரிகின்றது. திராவிடம் என்ற சொற் பிறப்பினைக் குறித்து மொழி நூல் வல்லுநரிடையே மூன்று திறக் கருத்துகள் உள்ளன.

(1) திராவிடம் என்ற சொல் திரு இடம் என்ற இரு சொற்கள் சேர்ந்து **திரு+இடம்**=திருவிடம் என்றாகி, **திருவிடம்**, நாளடைவில் மக்கள் பேச்சு வழக்கிலே **திரவிடம்** என்று மருவி, திரவிடம் பிறகு **திராவிடம்** என மருவி இன்றைய உருவம் பெற்றது என்பது ஒரு சாரார் கருத்து.

(2) **தமிழ்** என்ற சொல் நாளடைவில் அம் என்ற விகுதி சேர்ந்து **தமிழம்** என்றாகி, (தமிழ்+அம்= தமிழம்) தமிழம் பின்னர் **தமிளம்** என்று மருவி, பின்னர் முறையே தமிளம, த்ரமிளம் என்றும், த்ரமிளம் திரவிடம என்றும், திரவிடம் திராவிடம் என்றும் மருவி இன்றைய நிலையைப் பெற்றது என்பது மற்றொரு சாரார் கருத்து.

(3) கடலலையால் சூழப்பட்ட நாடு என்ற கருத்தில் திரை+இடம் =திரையிடம் என்றாகி, திரையிடம், திரயிடம்—திரவிடம்—திராவிடம் என மருவிற்று என்பது மூன்றாவது சாரார் கருத்து.

இம் மூவகை முடிவுகளுள் எதனை ஏற்பதாயினும் சரியே. சொல், தமிழ்ச் சொல் என்பது தேற்றம்!

2 தமிழ்நாட்டில் திராவிடர் கழகம் இருப்பது போல, ஆந்திர மலையாள கன்னடப் பகுதிகளில் இல்லாத காரணம் என்ன? ஏன், கழகம், அங்கெல்லாம் தன்னுடைய திராவிடநாட்டுப் பிரிவினைப் பிரசாரத்தை இன்னமும் தொடங்கவில்லை?

உம்முடைய முதல் கேள்விக்குத் தக்க விடை, நண்பரே, கொஞ்சம் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் தெரியும், உம்முடைய இரண்டாவது கேள்வியிலேயே இருக்கிறது! தமிழ்நாட்டில் திராவிடர் கழகம் இருப்பதுபோல, ஆந்திர மலையாள கன்னடப் பகுதிகளில் இல்லாததற்குக் காரணம், நீரே கூறுவது போல, கழகம், தன்னுடைய திராவிடநாட்டுப் பிரிவினைப் பிரசாரத்தை அங்கெல்லாம் இன்னமும் தொடங்காமல் இருக்கிறதே, அது தான்! தக்க முறையில் சில காலம் தீவிர பிரசாரம் நடத்தப்பட்டு ஆந்திர மலையாள கன்னடியத் தோழர்களின் உள்ளத்தில் நமது கருத்தை மெள்ள நுழைத்துவிட்டால், பிறகு, கழகக் கிளைகள், அங்கெல்லாம், ஊருக்கு ஊர் தோன்றிவிடும். ஆகவே, அங்கெல்லாம் கழகக் கிளைகள் தோன்றாமல் இருப்பதற்கான குற்றம் நம்முடையதுதானே தவிர அவர்களுடையதல்ல—நாம் தான் இன்னமும் பிரசாரத்தை அங்கெல்லாம் தொடங்காமல் இருக்கிறோம். ஆனால் நாம் நம் பிரிவினை கீதத்தை அங்கே இன்னமும் ஒலிக்காமல் இருப்பதற்குக் காரணம், இந்த கீதத்தை அங்கு முழக்குவதற்குப் பக்குவமான சூழ்நிலை இன்னமும் அங்கே உருவாகாததுதான்! ஆந்திரர்களின் உள்ளமும், மலையாளிகளின் எண்ணமும் கன்னடர்களின் கருத்தும், தத்தமக்குத் தனி மாகாணம் தேவை என்ற கோரிக்கையை முழக்குவதிலேயே இதுபோது உறைந்து நிற்கின்றன. எனவே

தமிழன் தொடுத்த போர்! ★ மா. இளஞ்செழியன் (B. A Hons) தீட்டியது!

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எழில் மிகு சித்திரம் இந் நூல். மறுபடியும் போர்முரசு கொட்டப்படும் இந்நாளில் தமிழர் ஒவ்வொருவரும் இதனைப் படித்துணரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை.

240 பக்கங்கள் விலை 1 12 0 தபாலில் 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழகாரத் தெரு :: சென்னை 1.

இந்த நேரமாகப் பார்த்து நாம் நம் கூட்டாட்சித் தத்துவத்தை அங்கே பரப்பத் தொடங்கினால், இது, அவர்களுடைய மாகாணப் பிரிவினைக் கோரிக்கையை மட்டந்தட்டத் தொடங்கப்பட்டிருக்கும் ஏதோ ஒரு சூழ்ச்சித் திட்டம் என்றுதான் அவர்களுக்குத் தோன்றுமே தவிர நம் திராவிடநாட்டுப் பிரிவினையின் உன்னத நோக்கம் அவர்கள் மனதில் நுழையாது. செய்ய வேண்டிய காலத்தில் ஒரு செயலைச் செய்யாமல் இருப்பது எப்படித் தவறோ அப்படித்தான் செய்யக்கூடாத காலத்தில் ஒரு செயலைச் செய்வதும் தவறு. இப்போது, ஆந்திர நாடும் மலையாளமும் கன்னடப் பகுதியும் தமிழகத்துடன் பிணைக்கப்பட்டு ஒரே சென்னை மாகாணமாக இருப்பதால்தான், தங்களுடைய தரணிகள் வளம் பெறவில்லை, தமிழகம்மட்டும் செழிக்கிறது என்று அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தவறு அவர்கள் கண்ணை மறைக்கும் காரணத்தாலேயே, அவர்கள் நாட்டை, வட இந்தியா சுரண்டிக் கொழுக்கும் சூது அவர்கள் கண்ணுக்குச் சிறிதும் புலப்படவில்லை. ஆனால் தனி மாகாணங்கள் அமைக்கப்பட்டு, தமிழகம் தங்கள் வட்டாரங்களைச் சுரண்டுவதாகத் தாங்கள் இதுவரை எண்ணி வந்தது முற்றிலும் தவறு என்பதை அவர்கள உணர்ந்ததும், வடநாட்டுச் சுரண்டலும் சூதும் அவர்களுக்கு நிச்சயம் புலப்படும். அந்த நேரமாகப் பார்த்து, நாம், நாம் நால்வரும் ஒரே கூட்டாட்சியில் இருப்பதுதான் நம் நால்வரையும் ஒருங்கே சுரண்டிவரும் வடநாட்டவர்தம் சூழ்ச்சிப் பொறியிலிருந்து தப்புவதற்கான சரியான மார்க்கம், என்று பிரசாரம் செய்வோமானால், பிரசாரம் காட்டுத்தீப்போலப் பரவும். அது வரையில் நாம் அங்கெல்லாம் நம் பிரசாரத்தைத் தொடங்க முடியாது—தொடங்கவும் கூடாது.

3. வைதீக நச்சரவுகள் தங்கள் நஞ்சைப் பாய்ச்ச பல ஆங்கிலத் தினசரிகளை நடத்திக் கொண்டிருக்கும் போது உயர்ந்த கொள்கைகளை உடைய நம் இயக்கத்தின் குறிக்கோளை உலக மக்கள் அறிந்து ஆதரவு கொடுக்க நமக்கென்று ஓர் ஆங்கில தினசரி இருக்க வேண்டாமா?

நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும். நம்முடைய திராவிடநாட்டுப் பிரிவினை நாதம் நடைமுறைக் கீதமாக மாற வேண்டுமானால், திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினை ஒரு அகில இந்தியப்பிரச்சினையாக மட்டுமல்ல, ஒரு அகில உலகப் பிரச்சினையாக மாறியாகவேண்டும். இந்தப் பரந்த இந்தியத் துணைக் கண்டத்திலே இதுபோல ஒரு மகத்தான பிரச்சினை சென்ற பத்தாண்டுகளாக இருந்து வருகிறது என்னும் உண்மையை உலகத்தின் எட்டுத் திசைகளிலும் நாம் முழக்கியாக வேண்டும். உலகம் எங்கணும் நமது பிரச்சினை மிக மிக முக்கியமான பிரச்சினையாகக் கருதப்பட்டுப் பேசப்படுகின்ற நிலைமையை நாம் உண்டாக்க வேண்டும் இவ்வளவும் செய்வதற்குரிய பல வழிகளில் மிக முக்கியமான ஒரு வழி ஆங்கில தினசரிகளை நடத்துவது! நடத்த வேண்டாமா என்று கேட்கிறீர் நீர்; நடத்தத்தான் வேண்டும் என்று பதில் கூறுகிறேன் நான். ஆனால் நம் இருவரிடமோ ஒரு ஆங்கிலத் தினசரியை நடத்துவதற்குத் தேவையான பணம் இல்லை! பணம் இருப்பவர்களிடமோ, இதற்கான மனம் இல்லை! என்ன செய்யலாம்!

4. இன்றைய பல கடவுள்களை யெல்லாம் நீங்கள் மறுக்கிறீர்களா? அப்படியானால், கடவுளே கிடையாதா? உண்டா? உங்கள் கருத்தென்ன?

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த எங்கள் கருத்தெல்லாம் கடவுளின் பெயரால் மக்களின் நேரம், நினைப்பு, அறிவு, முயற்சி, பணம் ஆகியவை பாழாக்கப்படக்கூடாது என்பது தானே தவிர, கடவுள் உண்டா இல்லையா என்பது போன்ற அர்த்தமற்ற ஆராய்ச்சியில் இறங்கி வீண்பொழுதுபோக்க எங்கட்கு நேரமில்லை. எப்படியாவது, மனித சமுதாயத்தில் காணப்படும் குறைகள் தீர்ந்து, கவலைகள் குறைந்து, பசியும் பட்டினியும் பிணியும் போரும், மறைந்து, வளமான வாழ்வு பெருக வேண்டும் என்பதே எங்கள் ஆசை. இதற்காகவே நாங்கள் பாடுபட்டு வருகிறோம். இந்த உன்னதமான இலட்சியத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான உயரிய முயற்சியிலேயே எங்கள் காலம் முற்றிலும் செலவாகிவிடுகிறது. ஆகவே கடவுளைப்பற்றி எண்ணிப் பார்ப்பதற்கு எங்களிடம் ஒரு விநாடியும் மிச்சமில்லை! எனவே, இந்தக் கேள்வியை எங்களைப் பார்த்துக் கேட்பதிலே சிறிதும் அர்த்தமில்லை வேறு யாருக்கோ அனுப்ப வேண்டிய கேள்வியை, தவறுதலாக, போர்வாள் நிலையத்திற்கு அனுப்பி விட்டீர், கேள்வியைத் திருப்பி அனுப்பிவிடுகிறேன், பெற்றுக் கொள்ளும்! என்ன, சரிதானா?

திக்கெட்டும் "தீ" பரவுகிறது!

"தீ" சிறந்த சமுதாய சீர்திருத்தப் பத்திரிகை

வார வெளியீடு விலை 0-2-0

ஆரிய மாயையைச் சுட்டுப் பொசுக்குவது "தீ"
ஆளவந்தார் தம் ஆணவத்தை எரித்துத் தள்ளுவது "தீ"
தமிழர் உண்ணத்தக்க நல்ல அறிவுணவினைச் சமைத்துத் தருவது "தீ"

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை

விவரங்கட்கு:

"தீ" மேனேஜர்
147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

தென்றல் மட்டும் போதாது!

[மா. இளஞ்செழியன்]

நீண்ட இரவிற்குப் பிறகு காலைக் கதிரவனின் சுடர்கள் எங்கணும் ஒளிவீசத் தொடங்கி இருக்கின்றன.

பாலைவனத்தில் தொலைதூரம் பயணம் செய்த பிற்பாடு பழமுதிர் சோலையொன்று காட்சி அளிக்கின்றது.

ஓட்டைக் குடிசைகள், புல்மூடிப் போன புதர்கள், மண்மேடிட்ட மண்டபங்கள், இடிந்து தொறுங்கிய கட்டிடங்கள், இவற்றையே கண்டு கண்டு சலித்த கண்கள் உல்லாசமான மாடமாளிகைகளையும் உயர்தரமான கூட கோபுரங்களையும் காண நேர்ந்திருக்கின்றது!

ஒளி இழந்த கண்கள், குழி விழுந்த கன்னங்கள், வலிமை அற்ற தோள்கள், உறுதி இல்லா உள்ளங்கள் என்னும் இந்த நிலை மாறி, வீரம் ததும்பும் தோற்றமும் வயிரம் பாய்ந்த நெஞ்சமுமே எங்கணும் காணப்படும் அழகுநிலை தொடங்கியிருக்கின்றது.

சோர்வு, சோகம், தொல்லை, துயரம், ஏக்கம், மனத்தளர்ச்சி—இவை எல்லாம் இல்லை இப்போது! அழகு, ஆநந்தம், ஆர்வம், எக்காளம், எழுச்சி, கிளர்ச்சி—இவற்றின் கிண்கிணி நாதம் தான் உண்டு.

உண்மை! இன்று தென்றல் வீசுகிறது! நம் உடல் சிலிர்க்க, உள்ளம் சிலிர்க்க, உணர்ச்சியெலாம் சிலிர்க்கச் சிலிர்க்கத் தென்றல் வீசுகிறது. நம்மை மகிழ்விக்க—ஆநந்தத் தொட்டிலில் நம்மைத் தாலாட்ட இளந்தென்றல் இன்று தோன்றி இருக்கின்றது.

தமிழ் இலக்கிய உலகில் இன்று தோன்றியுள்ள மறுமலர்ச்சியைத் தான் நான் குறிப்பிடுகிறேன்.

முன்பெல்லாம்—ஏன் நேற்று வரையில்—தமிழ் இலக்கியம் என்றால் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, மாபாரதம், இராமாயணம், தாயுமானார், அருணகிரியார், சில புராணங்கள் என்னும் இந்த அளவோடு அதன் எல்லைக் கோடு நின்றுவிட்டது.

இன்றும் பள்ளிப் புத்தகங்களில் அப்படித்தான் இருக்கின்றது. ஆனால் வெளி உலகில்—மக்கள் மன்றத்தில்—தமிழ்ப் பொது மேடையில் எத்தனையோ புதுப்புது இலக்கியங்கள் தங்கள் நலங்காட்டத் தொடங்கி இருக்கின்றன. தமிழன் குரல் இன்று வெறும் புராணகாலக் குரலாகவோ இதிகாச காலக் குரலாகவோ இல்லை. புத்தம் புதிய குரலாயிருக்கிறது, புரட்சிக் காலப் புது உலகக் குரலாயிருக்கிறது.

பழம் புராணங்களையே படித்துப் படித்து, அவற்றிற்கே விளக்கவுரையும் பதவுரையும் பொழிப்புரையும் கருத்துரையும் சொல்லிச் சொல்லி, தமிழர் சமுதாயத்தைப் பின்னுக்குத் தள்ளி வந்தனர் தமிழ் எழுத்தாளர்கள். சமீப காலம் வரை! புதிய உலகமும் புதிய கருத்துகளும் புதிய வாழ்வும் புது நிலை நலங்களும் இருக்கக் கூடும் என்ற எண்ணமே அவர்களுக்கு அப்போது தோன்றவில்லை. புதிய கருத்துக்கள் தோன்றவில்லை என்பது மட்டுமல்ல, புதிய சொற்கள் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவோம் என்று அவர்கள் எக்காளமிட்டார்கள். அப்படியே போற்றியும் வந்தார்கள். சமயம் என்றால் இலக்கியம், இலக்கியம் என்றால் சமயம் என்பது அவர்கள் நினைப்பு. எனவே தான் சமயம் கலவாத இலக்கியம் ஒன்றேனும் அன்று வெளிப்படவில்லை. தின்றதைத் தின்று தெவிட்டுதல் இல்லாமல் அன்றன்றாடம் வாழ்க்கையில் புதுமை காணவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படவில்லை. ஏற்படாததால், அரைத்த மாவையே அரைத்து சலித்த கைகளை மேலும் சலிக்கச் செய்யும் "பண்பு" அன்று மிகுந்திருந்தது. இதைத்தான் "செக்கு மாட்டுப் போக்கு" என்கிறார் பாரதிதாசன். என்ன அருமையான கிண்டல்!

இந்த செக்குமாட்டுப் போக்கை "நிறுத்து" என்று முதன்முதல் தைரியமாகக் கூறியவர் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரனார் தான். நீண்ட கால இருட்டுக்குப் பிறகு தோன்றிய ஒளி மனோன்மணீயம். புதிது புதிதாகத் தலபுராணங்களைப் புனைவதில் எல்லோரும முழுமூச்சாக ஈடுபட்டிருந்த அதே சமயத்தில்தான் பேராசிரியர் சுந்தரனார் இந்த அழகிய காதல் சித்திரத்தைத் தீட்டிக் காட்டினார். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பை விளக்கிக் காட்டுவதுதான் தன் நாடகத்தின் உள்ளுறை பொருள் என்று அவர் சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அது ஒப்பற்றதோர் காதல் இலக்கியம். தமிழ் இலக்கியத்தின் இன்றைய புதுப்போக்கைத் துவக்கி வைத்தவர் சுந்தரனார் தான். கருத்தின் புதுமையிலும் சரி, சொல்லின் எளிமையிலும் சரி, இன்றைய எழுத்தாளர்கட்கு முதல் வழிகாட்டி அவர் தான். இதைச் சிலர் மறுக்கலாம். சிலர் மறைக்கலாம். சிலர் மறப்பது போல் பாவனை செய்யலாம். ஆனால் உண்மை என்னவோ இது தான்.

ஏறத்தாழ இதே காலத்தில் சங்க இலக்கியங்களில் பல, "தமிழர் அலட்சியப் போக்கு" என்னும் சுரங்கத்திலிருந்து தோண்டி எடுத்து வெளியே கொண்டுவரப்பட்டன. அகநானூற்றின் அழகும், கலித்தொகையின் தெளிவும், நற்றிணை—நல்ல குறுந்தொகை—ஐங்குறுநூறு—ஒத்த பரிபாடல் முதலியவற்றின் இயற்கைக் காட்சிகளும், உள்ளதை உள்ளபடியே எடுத்துக் கூறும் பத்துப்பாட்டின் சிறப்பும் தமிழ்நாட்டில் ஒரு புது எழுச்சியை உண்டு பண்ணின. இலக்கியம் என்பது "சமய ஞான விளக்கம்" மட்டுமல்ல, வாழ்க்கையின். சிக்கல்களையும் சிறப்புகளையும் மேடு பள்ளங்களையும்கூட எடுத்துக்காட்டும் உயிரோவியம் என்பதைத் தமிழர் தெளிவாக அறிந்துகொண்டனர், சங்க இலக்கியங்களின் "பவனி"யைக் கண்டு! தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் இரண்டாவது கட்டம் இது. வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம்

நாவல் என்னும் துறையிலும், ஆறுமுக நாவலர் செல்வக் கேசவராயர் கா. நமசிவாயர் முதலியவர்களின் நூல்கள் பள்ளிப் புத்தகங்கள் என்னும் துறையிலும், மறைமலை அடிகளாரின் தெள்ளிய தமிழ் நடை உரை நடைத் துறையிலும் வழிகாட்டிகளாயின. இந்தக் காலத்தில்தான் உரைநடை இலக்கியம் சிறிது சிறிதாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. சில பத்திரிகைகளும் தோன்றின.

கவி. சுப்பிரமணிய பாரதியார் தோற்றம், மூன்றுவது கட்டம். அவர் காலம் வரையில் இலக்கியத்தின் தன்மையும் போக்கும் வேறு, நாட்டின் நினைப்பும் நிகழ்ச்சியும் வேறு என்ற நிலைமையே இருந்து வந்தது. இலக்கியத்திற்கும் நாட்டு நடப்புக்கும் நடுவில் ஆழமான—அகலமான — சுலபத்தில் தாண்ட முடியாத இடைவெளி யொன்று அமைந்து கிடந்தது. பாரதியார் இரண்டிற்குமிடையே பாலமொன்றை அமைத்தார், வாழ்க்கையையும் இலக்கியத்தையும் இணைத்துக் காட்டினர். நாட்டிலே நிகழ்ந்து வந்த தேசீயப் போராட்டங்களுக்குப் பட்டாளம் சேர்ப்பதற்கான புதுப் பாசுரங்களாக அவருடைய கவிதைகளை அமைத்துக் கொண்டார். நாட்டு நிகழ்ச்சிகளோடு தொடர்புள்ள கவிதைகளை—உயிருள்ள கவிதைகளை—உணர்ச்சி ததும்பும் சொல்லோவியங்களை அவர் தமிழகத்துக்குத் தந்தார்.

பாரதியார் நாட்டை ஏட்டுடன் தொடர்பு படுத்தினரே ஒழிய, நம் நாடு எது என்பதில் திட்டமான தெளிவான சிக்கலுக்கு இடமற்ற போக்குடன் அவர் இருக்கவில்லை. பாரத தேசம் ஆரியராணி தமிழ் நாடு என்று ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட பல கருத்துகளின் போராட்டமாகவே அவருடைய எழுத்து காட்சி அளிக்கிறது. இந்தியா-இந்தியர் என்கின்ற எண்ணத்திற்கும், தமிழ்நாடு—தமிழர் என்கின்ற உறுதிக்கும் இடையே ஊசலாடும் ஓர் ஊஞ்சல் அவருடைய கவிதை.

ஆனால் கவி, கனகசுப்புரத்தினம் அழுத்தந் திருத்தமாகவே குறிப்பிட்டார் தான் ஒரு தமிழன் என்பதை. குறிப்பிட்டார் என்பது மட்டுமல்ல; தமிழன் என்ற எண்ணம், தமிழ் நாடு என்ற வரையறை, தமிழர் வாழ்வு என்னும் சிந்தனை இவைகளையே அவர் தன்னுடைய கவிதா மண்டலத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்டார். புதிய தமிழகம் உருவாக வேண்டும் என்ற சிந்தனையை அவருடைய கவிதைக் கனல் கிளப்பி விட்டதைப்போல வேறு யாருடைய கவிதையும் கிளப்பிவிடவில்லை. நாம் பிறந்த நம் பொன்னாட்டை நம் கண்முன்னால் நிறுத்திக் காட்டி, 'இதோ உன் நாடு, உன் வளநாடு, வாழ்ந்து கெட்ட தமிழ்நாடு! இதன் குறை இது, இதன் சிக்கல் இது, இதன் தாழ்ச்சி இது, இது செல்ல வேண்டிய பாதை இது! புறப்படு, தைரியமாகப் புறப்படு, போ வெளியே. மீசையை முறுக்கி மேலே ஏற்று. விழித்த விழியில் மேதினிக்கு ஒளி செய். நகைப்பை முழக்கு; நடத்து லோகத்தை. ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவ அல்லல்கள் வரின் ஏற்பேன், ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு உவப்புடன் நான் சேர்ப்பேன் என்று சூள் உரைத்துவிட்டு, புதுப் பாதைக்குப் போ. புது வாழ்வைத் தொடங்கு" என்று தமிழனுக்கு ஆணையிட்ட அஞ்சாத நெஞ்சன் பாரதிதாசன்.

* * *

தமிழன் யாருக்கும் தாழ்ந்தவன் அல்லன் என்று தலை நிமிர்ந்து கூறும் நெஞ்ச வீறு பழைய இந்தி எதிர்ப்புக்காலத்தில்தான் பிறந்தது. நாம்மறக்கவில்லை, அதற்கு முன்னால்கூட தமிழ்-தமிழன்-தமிழ்நாடு என்கிற உணர்ச்சி இருந்ததுண்டு. ஆனால் அப்போதெல்லாம் அந்த நாதம் இவ்வளவு தைரியமாகவோ இத்துணை வெளிப்படையாகவோ எழுப்பப்படவில்லை. இந்தி எதிர்ப்பு இயக்கம் உச்சநிலைக்கு வந்தபோது தான் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் ஒலி வீறிட்டெழுந்தது. அதனுடைய எதிரொலி கேளாத இடமில்லை. அதன் சக்திக்கு அடங்காத தமிழரில்லை! தமிழனுடைய அந்த இதய கீதத்தைத் தமிழரிலேயேகூட சிலர் கேலி செய்தனர் முதலில். அலட்சியப்படுத்தினர் பலர். இந்தப் பருப்பு வேகாது என்று சொன்னவர்களு முண்டு. ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த காலத்திலேயே அவர்களையும் அறியாமல் அந்த முழக்கம் அவர்கள் உள்ளத்தை ஆட்கொண்டுவிட்டது என்பது நமக்குப் பின்னால்தான் தெரியவந்தது.

பாரதிதாசனைத் தமிழர்கள் கண்டு கொண்டது இந்த இந்தி எதிர்ப்புக் காலத்தில்தான்.

இந்தக் காலத்தில் ஓங்கி எழுந்த தமிழ் இன உணர்ச்சியும் பாரதிதாசன் துந்துபியும் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு தமிழ் இலக்கிய உலகிலே ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கிவைத்தன. இதற்கு முன்னெல்லாம், நாம் ஒரு தனி இனம் என்ற உணர்ச்சியோ, நம் நாடு தனி நாடு என்ற நினைப்போ, நாம் வாழ ஒரு வட்டாரம் தேவை என்ற உறுதியோ தமிழர் வாழ்வில் இருந்ததில்லை; தமிழ் நாட்டு இலக்கியத்திலும் இருந்ததில்லை. ஆனால் இதன் பின் எங்கும் தமிழ் நாடு என்பதே பேச்சு. யாண்டும் தமிழ் மொழி என்பதே முழக்கம். நாடகத்தில், இசை அரங்கில், அரசியலில், மொழித் துறையில், பத்திரிகை உலகில், கலையில், வாழ்வில் அத்தனையிலும் இந்த உணர்ச்சியின் வெளிப்பாடே இந்நாள்.

இந்த இன்ப நிலையைத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் நான்காவது கட்டம் என்று நாம் குறிப்பிடுவதில் தப்பில்லை.

தமிழ் இன உணர்ச்சி இன்று வெகு வேகமாக நாடு முழுவதும் பரவிப் பாய்கிற தன்மையைக் கண்டு தென்றல் வீசுகிறது என்று நாம் மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்டுவதிலும் தப்பில்லை.

இந் நிலை மகிழ்ச்சிக்குரியது; மகிழ்வோம், இது என்றும் இருக்கவேண்டியது; எனவே இதை வாழ்த்துவோம்.

ஆனால் ஒன்று.

இது, நம் பயணத்தின் முடிவல்ல.

நமது இன்பக் கனவு இன்னும் நனவாகவில்லை.

நாம் சென்று தீரவேண்டிய "இலட்சிய பூமி"க்கு நாம் இன்னும் வந்து சேரவில்லை.

இது நம் நினைவில் இருக்கவேண்டும்.

புதிய தமிழகம்—ஏழை என்றும் அடிமை என்றும் எவருமற்ற சமுதாயம்—எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான திரு இடம்—இது நமது இலட்சியம். இந்த நம் இலட்சியம் நிறைவேறிய பின்பு தோன்றும் தமிழ் இலக்கியம், நம் நாட்டு இலக்கிய மறுமலர்ச்சியின் ஐந்தாவது கட்டம்—முடிவான கட்டம்,

(9-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 1
14—5—49 சனிக்கிழமை

மரணத்தின் அழைப்பு! மறுபடியும்!

"உதயசூரியன் உதிக்கும்; மேலே உயரும்; தாழும்; இறுதியில் இருள் சூழும்!

மலர்மொட்டு மலர்ந்து மணம் வீசும்; கருகி உதிரும்; சருகாய் வீழும்!

இவைபோல மனிதருக்கு உறுதி மரணம்! அது, இனி எனக்கு இணைபிரியாத் தோழன்!

எனவே என்னைப்பற்றி எண்ணி மனம் உருகவேண்டாம்! இறப்பது சகஜம்! வாழ்க வையகம்!"

உள்ளம் உருக்கும் இந்த உயரிய வாசகங்களை வீசியவன் ஓர் இளைஞன்; கட்டிளங்காளை; இளமையும் எழிலும் ததும்பும் பருவம் அவனுடையது! இருபத்திநான்கு, அவன் வயது! வாழ்க்கைக் கடலிலே, இன்பத் தோணியில் ஏறிக்கொண்டு, ஆநந்த கீதம் இசைத்த வண்ணம் அழகுபவனி வரவேண்டிய காலம்! இத்தகு காலத்திலே தான் தூக்குமேடை அவனைக் கூவி அழைத்தது வா வா என்று! அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறு அனைய அந்த வீர இளைஞன் தன் மரணத்தைத் தழுவச் சென்ற அந்த நேரத்தில்தான் இந்த வீர வாசகங்களை வீசினான், பிறகு மடமடவென நடந்து சென்றான் மரணபுரிக்கு; மாண்டு போனான்!

தூக்குமேடை, அந்தத் தூயோனைக் கூவி அழைத்தபோது அவன் அஞ்சினானா? அலறித் துடித்தானா? ஐயகோ அந்தோ என் செய்வேன் என்றெல்லாம் அவல மொழிகளை வீசினானா? துளியேனும் கலங்கினானா? ஒரு சொட்டு கண்ணீரேனும் சிந்தினானா? இல்லை இல்லை! அந்த மாவீரன், மரணம்தானே, வரட்டுமே, வந்தால் என்ன, தூங்குதல் போன்றது சாக்காடு பின்னர்த் தூங்கி விழிப்பது நம் பிறப்பு என்று பாசுரம் பாடினான், உயிர் எனக்கு வெல்லமல்ல—ஆனால் உரிமை உணர்ச்சியே எனக்கு உயிர் என்று முழங்கினான், இறப்பது இயற்கை—பிறந்தவர் யாரும இறந்தே தீரவேண்டும்—இதற்கோ யான் அஞ்ச வேண்டும் என்று முத்தமிழ் முரசு கொட்டினான், ஞாயிறு, காலையில் தோன்றும்—பிறகோ மடமடவென உயரும்—நண்பகலுக்குப் பிறகோ கீழே சாய்ந்து வீழும் — அதுபோன்றது தானே நம் வாழ்க்கை—இந்த வாழ்க்கை பறிபோவதற்கா நான் கலங்கவேண்டும்—இல்லை! அது தேவையில்லை என்று உறுதி மொழிகளை உயர்கருத்துத் தேனிலே தோய்த்தெடுத்துத் தந்தான், செடியிலே மலர் அரும்புகிறது—அரும்பும் போது அதனைக் காணக் காண ஆநந்தம் பிறக்கத்தான் செய்கிறது—ஆனால் மலர், பிறகோ கருகி உதிர்ந்து உலர்ந்த சருகாக மாறிவிடுகிறது—அப்படித்தான் என் வாழ்க்கை மலரும் சருகாகப் போகிறது—போகட்டுமே அதனால் என்ன என்று பெருவீரத்தைச் செந்தமிழில் பிசைந்தெடுத்துத் தந்தான்! ஆம்! அந்த வீர இளைஞன் மரணம் வந்து தன்னை மருட்டுவதைக் கண்டும் துளியளவும் நெஞ்சம் கலங்கினானில்லை! புன்னகை பூத்த முகத்துடனே பூமாலையுடன் நின்று கொண்டிருந்தான் மரணத்தை வரவேற்க! வந்தது மரணம்—கண்டான் இளைஞன்—கட்டித் தழுவினான்—பூமாலையைச் சூட்டினான்—அந்தோ, மறைந்து போனான்! இல்லை! மறைக்கப்பட்டு விட்டான்!

அமைதி நிரம்பிய முகம், சாந்த ஒளி வீசும் கண்கள், புன்னகை தவழும் தோற்றம், அந்தப் புன்னகைக்குப் புது மெருகு கொடுப்பது போன்ற அரும்பு மீசை, உடலிலோ ஒரு சாதாரண கிழிந்துபோன சட்டை, இடுப்பிலோ ஒரு பழைய வேட்டி, ஆனால் உள்ளமோ தொழிலாளர் நல்வாழ்வு பெறுவதெப்படி என்பதைப் பற்றியே எப்போதும் எண்ணிக் கொண்டும் அதற்கான திட்டங்கள் பல தீட்டிக்கொண்டும் இருக்கும் ஓர் பல்கலைக் கழகம்! இத்தகு உள்ளமும் உருவமும் படைத்த ஒரு வீரத் தமிழனைத்தான், ஒரு கட்டிளங்காளையைத்தான், செந்தமிழ் அன்னையின் ஒரு செல்வக் குழந்தையைத்தான், தமிழ்த்திருநாடு பெற்ற ஒரு ஒப்பற்ற வீரனைத்தான், மலாய் நாட்டுத் தூக்குமேடை, தன் கோரப் பசிக்குப் பலியாக்கிக் கொண்டது சென்ற கிழமை! நினைத்தாலே உள்ளத்தைப் பிளந்துவிடும் சம்பவம்! கல்நெஞ்சையும் கரைத்துவிடும் கோராமை நிறைந்த கொடுமை.

அவன் ஒரு தமிழ் மகன்! வந்தவர்க்கெல்லாம் சுரண்ட இடம் தந்துவிட்டு தன் சொந்த மக்களைச் சோறின்றித் தவிக்கவைக்கும் இந்தப் பாழும் தமிழகம் பெற்றெடுத்த பிள்ளை! தன் சொந்த நாட்டில் வாழ வழியின்றி, அதற்கு ஒரு வழி தேட மலாய் சென்ற மறத்தமிழன்! ஏழை! ஏழை மட்டுமல்ல, ஏழைகளின் தலைவன்! மலாய் நாட்டிற்கு, பிழைக்கும் மார்க்கத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வந்து, அதைக் காணாது தவிக்கும் ஆயிரமாயிரம் பாட்டாளிகளின் பட்டினிப் பட்டாளத்துத் தளபதி! பாடுபட்டுப் பலன் காணாது தவிக்கும் பராரிகளின் உரிமைக்காக ஓயாது போராடிவந்த உத்தமன்! உழைப்பவர் உலகிலே இன்பம் பெருக வேண்டும்-வசதி ததும்பவேண்டும்-கவலைகள் குறைய வேண்டும்—களிப்பு கூத்தாட வேண்டும்-பட்ட பாட்டிற்கு ஏற்ற பலன் கிடைக்கிறது என்று தைரியமாகக் கூறத்தக்க நிலைமை ஏற்பட்டாக வேண்டும்—உழைத்தோம், உண்கிறோம், பாடுபட்டோம், பலன் காண்கிறோம், ஓயாது உழைத்தோம், தீராத இன்பத்தில் நீந்தித் திளைக்கிறோம்:

சக்திக்கேற்ற உழைப்பைத் தந்தோம், நம் தேவைக்கேற்ற வசதிகள் கிடைக்கின்றன, நம் வாழ்க்கை ஓர் அழகிய பூந்தோட்டமாக இருக்கிறது, அந்தப் பூந்தோட்டத்தில் ஆநந்தத் தென்றல் வீசியவண்ணம் இருக்கிறது, இனி என்ன கவலை நமக்கு என்றெல்லாம், பாட்டாளி, களிப்புடன் உரைக்கத்தக்க காலம் உருவாக வேண்டும்—சமதர்மபுரியிலே அவர்கள் சென்று குடியேறத்தக்க நாட்களை விரைவில் அழைத்துவர வேண்டும்—இல்லையே உணவில்லையே கதி இல்லையே எனும் எளிமை இனிமேல் இலை இனிமேல், இலை எனவே முரசறைய வேண்டும்—எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கிச் செல்லவேண்டும் இந்த வையம்—நல்ல பொதுவுடமைக் கொள்கை எட்டுத் திசையெங்கும் பரவவேண்டும்—இது எனது என்னுமோர் கொடுமை ஒழிய வேண்டும்! இவையும், இவைபோன்ற உயரிய எண்ணங்களும்தான் அந்த உத்தமனின் உள்ளத்தில் உயர் இடம் பெற்றுவிட்ட தத்துவங்கள்! இந்த உயரிய தத்துவங்களை நடைமுறைக் கீதமாக்கிக் காட்டவேண்டும் என்பதற்காகத்தான் அவன் ஓயாது உழைத்துவந்தான்! அத்தகைய உத்தம இளைஞனுக்குத்தான், மரணம், பரிசாகக் கிடைத்திருக்கிறது உலக உத்தமர் காந்தியாருக்கு மூன்று குண்டுகள் பரிசாகக் கிடைக்கவில்லையா, அதுபோல!

தூக்குமரத்தில் தொங்கினானே அத் தோழன், மரணத்தைச் சென்று தழுவி முத்தமிட்டு மாண்டு போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டானே அந்தக் கட்டிளங்காளை, வசீகரம் மிகுந்த வாலிபப் பருவத்தில் பலிபீடத்தில் ஏற்றப்பட்டானே அந்த இளந்தமிழன், அவன் அவ்வளவு கொடுந் தண்டனை பெறுவதற்குச் செய்த மகத்தான குற்றம்தான் என்ன? அவனிடம் ஒரே ஒரு துப்பாக்கி இருந்தது! அவ்வளவுதான்! அந்த ஒரு துப்பாக்கிதான் அவன் உயிரையே போக்கிவிட்டது! மலாய் நாட்டு அவசரச் சட்டப்படி எவரிடமும் துப்பாக்கி இருத்தல் ஆகாதாம், இருந்தால் சட்டம் தரும் தண்டனை மரணமாம், எனவேதான் அந்த இளந்தமிழன் தூக்கில் ஏற்றப்படவேண்டி நேரிட்டதாம்! "நான் காட்டிலே கொடு விலங்குகளுக்கிடையிலே பல மாதங்களாக மறைந்து வாழ்ந்து வந்தேன். அந்த விலங்குகளிடமிருந்து தப்புவதற்காகவே என்னிடம் ஒரு துப்பாக்கி என் தோழர்களால் கொடுக்கப்பட்டிருந்தது. நான் காட்டிலே உலவிக் கொண்டிருந்தபோது, நெடுநாட்கள்வரை, எனக்கு இப்படி ஒரு சட்டம் இருப்பதே தெரியாது, தெரிந்தவுடனே, என்னிடமிருக்கும் துப்பாக்கியை சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டுவது கடமை அல்லவா என்றெண்ணி, அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்காகப். புறப்பட்டேன். புறப்பட்டு கொஞ்ச தூரம் வந்த பிறகு, களைப்பால் ஒரு ரப்பர் மரத்தடியில் சிறிது நேரம் இளைப்பாறினேன்—அந்த நேரத்தில்தான் போலீசார் என்னைக் கைது செய்து, துப்பாக்கியை வைத்திருந்ததே குற்றம் என்று கூறலாயினர்!" தூக்கில் ஏற்றப்பட்ட இளைஞன் தமிழகத்திலிருக்கும் தன் அண்ணனுக்கு எழுதிய இறுதிக் கடிதத்தில் இருக்கும் வாசகங்கள் இவை! இந்த வாசகங்களைக் காணும் நேர்மை உள்ளம் படைத்த எவரும், அந்த இளைஞனைக் குற்றவாளி என்று கூறார், ஆனால் கூறிவிட்டனர், கூறி தூக்கும் போட்டுவிட்டனர், ஈவு இரக்கம் இல்லார்—அந்த மலாய் நாட்டு சர்க்கார்!

இளைஞனிடம் துப்பாக்கி இருந்தது மெய்தான்! ஆனால் அந்தத் துப்பாக்கி யாருடைய உயிரையும் பறிக்கவில்லை—பறிப்பதற்காக வென்று பயன்படுத்தப்படவுமில்லை—பயன்படுத்தப்பட்டதாகச் சாட்சி கூறுவாரும் இல்லை! துப்பாக்கியை வைத்திருப்பதே தவறு என்பதாக ஒரு சட்டம் இருப்பதை அந்த இளைஞன் அறியான்—எனவே துப்பாக்கியை வைத்திருந்தான்—சட்டத்தின் தன்மையை அறிந்ததும் உடனே சர்க்காரிடம் துப்பாக்கியை ஒப்படைக்கத்தான் சென்றான், செல்லும் வழியிலேதான் அவனைக் கண்டு மரண தண்டனையை அவனுக்குத் தந்துவிட்டனர் சர்க்கார் பிரதிநிதிகள்! கொடுமை! கொடுமை! குவலயம் எங்கணும் இதைவிடக் கொடுமை வேறொன்று இருக்கமுடியாது!.

தூக்குமேடை அந்த வீர இளைஞனைக் கூவி அழைத்ததின் உண்மைக் காரணம் என்ன? மலாய் சர்க்கார் கூறுவதுபோல அவன் ஒரு துப்பாக்கியை வைத்திருந்தானே அதுதானா அவனுடைய மரணத்திற்குரிய காரணம்? அல்ல அல்ல! அவன் மலாய்வாழ் பாட்டாளிகளின் நன்மைக்காக அல்லும் பகலும் பாடுபட்டான் — இதனை மலாய் நாட்டைத் தம் மனம்போன மட்டும் சுரண்டிக் கொழுக்கும் வெள்ளை முதலாளிகள் விரும்பவில்லை—எப்படி விரும்புவர் தம் சுரண்டலுக்கும் சூதுமார்க்கத்துக்கும் தூக்குமேடை எழுப்ப வந்த அந்த மாவீரனை — எனவேதான் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி அந்த உழைப்பவர் தலைவனை உயிர் இழக்கச் செய்துவிட்டனர் இரக்கம் என்னும் ஓர் பொருள் இலா அந்த அரக்கர்கள்!

மலாய்நாடு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேட்டைக்காடு! வெள்ளைக்கார வியாபார வேந்தர்கட்கோ அது நிலாச்சோறு! உள்

(10-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணாத்துரை

★

'போர்வாள்' ஆசிரியர்

மா. இளஞ்செழியன் B.A. (Hons)

தீட்டிய ஒப்பற்ற ஓர் கருத்தோவியம்

விலை 0—5—0

வியாபாரிகட்குத் தக்க இலாபம் தரப்படும்.

விபரங்கட்கு :

திராவிடன் பதிப்பகம்

P. B. No. 13. :: வேலூர் (வ. ஆ.)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஐயா, ஒன்றையும் நான் மறக்கமாட்டேன்! எங்குச் செல்கிறீர்? எப்பொழுது திரும்புவீர்?"

"கவலைப்படாதே, பத்தேபத்து விநாடிகளில் பறந்து வந்து விடுவேன்—பத்திரம், சொன்னதை மறந்து விடாதே!"

வயோதிகன் சொன்னதைக் கேட்ட இளைஞன் தூய மணி ஆச்சரிய மடைந்தான். விரல் விட்டு வீரன் நொடியைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தான். "பத்து" என்று மெதுவாக வாய்விட்டு கூறினான்! "தம்பி" என்று அழைக்கும் குரல் கேட்டாது!

"சொன்னபடி சரியாகவந்து விட்டீர்களே!" என்று வியப்பு நிறைந்த குரலில் உரைத்தான்.

அவன் ஆச்சரியத்தைக் கிழவன் பொருட்படுத்தவில்லை.

"தம்பி இதனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள் —புரிகிறதா? கவனமாகக் கேள்! பிடித்துக் கொண்டதும் முன் பக்கமாக இரண்டு அடி எடுத்து வை! உடனே நீ அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொள்வாய்! பயந்துவிடாதே! ஆபத்து இதில் ஒன்றுமில்லை. மெதுவாக அந்தக் கயிற்றின் வழியாகவே கீழே இறங்கு! பிறகு உன்னை நான் அழைத்துச் செல்கிறேன்......"

"ஐயா எவ்வளவு தூரம் கயிற்றில் நான் இறங்க வேண்டும்?"

"அதைக் குறித்து உனக்கேன் கவலை! சொற்படி செய்!"

"சரி"

கயிற்றின் வழியாக கீழே இறங்கி வந்தனர் இருவரும். படிக்கட்டுகள் வழியாக நடந்து சென்றனர். குளிர்ந்த காற்று தூயமணியின் உடலைத் தழுவியது!

"தம்பி, வந்து விட்டோம்!" என்று சொல்லிக்கொண்டே கிழவன் கண்களைக் கட்டியிருந்த துணியைத் தளர்த்தி அப்புறப்படுத்தினான்.

மலையிலேயே குடைந்தெடுத்த இல்லம்! அற்புதமான சித்திர வேலைப்பாடுகள்! ஒவ்வொரு ஓவியமும் இப்பொழுதுதான் பேசி வாய் மூடியவைபோல, அவ்வளவு உயிர்த்தன்மையோடு விளங்கின! "எவ்வளவு கைத்திறம்" என்று தனக்குத் தானே வியந்து மெதுவாகக் கூறிக்கொண்டான், தூயமணி!

"தம்பி, இதனை ஒருமுறை உனக்குச் சுற்றிக் காட்டுகிறேன் வா! பார்த்துக் கொண்டேவா! ஒவ்வொன்றின் விளக்கத்தையும் பிறகு உனக்கு நான் எடுத்துக் கூறுகிறேன்!"

இருவரும் ஒரு வாயிற்படியினுள் நுழைந்து சென்றனர். அங்கே இரண்டு சிறிய பள்ளங்கள் இருந்தன. குனிந்து ஒரு பள்ளத்திலிருந்த தண்ணீரைக் கைகளால் வாரினான். "அப்பா, எவ்வளவு குளிர்ந்து இருக்கிறது!" என்று தூயமணி கூறியதும், "மற்றொரு பள்ளத்திலிருக்கும் நீரையும் அள்ளிப்பார்!" என்று கிழவன் சொன்னான்.

"அப்பப்பா!"

"என்ன தம்பி!"

"எவ்வளவு சூடாக இருக்கிறது!"

"சரி, வா மேலே செல்லலாம்!"

வேறொரு வாயற்படியினுள் நுழைந்து சென்றனர். அங்கே ஒரு நொண்டிக் கிழவன் உளியை வைத்துக் கொண்டு கல் சுவரில் ஏதோ ஒரு உருவைச் செதுக்கிக் கொண்டிருந்தான்.

"ஐயா, நீங்கள் சொன்ன கிழவர் இவர்தானா?"

"ஆமாம்!"

இருவரும் அக்கிழவனின் அருகே சென்றனர், புதிய கிழவன் உளியைக் கீழே வைத்துவிட்டு மௌனமாகக் கீழே உட்கார்ந்தான். கண்களை மூடிக்கொண்டு தவம் புரியும் யோகியைப் போல் காணப்பட்டான் அவன்!

"ஐயா, நாம் வந்திருப்பதைப் பார்த்துவிட்டும், கவனியாமல் இருக்கிறாரே?"

"தம்பி, அவர் கவனிக்க வேண்டியது உலகில் இப்பொழுது ஒன்றுமே கிடையாது! நம்மை அவர் பார்த்தார் என்று நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய்! சுத்த தவறு! அவர் விழிகள் நம்மைக் கண்டனவே தவிர நம் உருவங்கள் அவர் கண்ணினுள் விழுந்திருக்காது!........ இவரோர் ஆச்சரியமான மனிதராக உனக்கு இன்னும் சிறிது நேரத்தில் தோன்றப் போகிறது பார்!" என்று கிழவன் சொன்னதும், அங்கேயிருந்த ஓர் ஆசனத்தில் இருவரும் உட்கார்ந்தனர்.

"இவரென்ன தவம் செய்கிறாரா?" என்று தூயமணி வினவினான்.

"தவமா? அதற்கும் இவருக்கும் நெடுந் தூரமாயிற்றே!"

"கண்களை மூடிக்கொண்டு வேறென்ன செய்கிறார்?"

"சிந்திக்கிறார்!"

"எதைக் குறித்து?"

"மக்களின் நலத்தைக் குறித்துதான், வேறென்ன இருக்கும்? இப்படி அவர் யோசனையில் ஆழ்ந்துவிடுவது இன்று நேற்றைய வழக்கமல்ல. பல ஆண்டுகளாக இதனை அவர் செய்து வருகிறார்!"

சிந்தனையில் ஆழ்ந்திருந்த நொண்டிக் கிழவன் எழுந்தான். அறையின் ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்த தீயின் அருகில் சென்று சிறிது நேரம் உட்கார்ந்தான். பிறகு அறையை விட்டு அடுத்த அறைக்குச் சென்றான். வெந்நீர்ப் பள்ளத்தில் மூழ்கினான். உடனே அடுத்திருந்த தண்ணீர்ப் பள்ளத்தில் குளித்தான். குளித்து முடிந்ததும் வேகமாக முன்பிருந்த அறைக்கே வந்தான். உளியை எடுத்துக் கொண்டு பழையபடி கல்லில் செதுக்க ஆரம்பித்தான்.

"நாழிகைக்கு ஒருமுறை இப்படி மாறிமாறி அவர் செயல்கள் நடந்து கொண்டிருக்கும்! இது அவருக்கு வழக்கமாகி விட்டது! இப்படிச் செய்து செய்து அவர் ஒரு யந்திர மாகவே மாறி விட்டார்! அவர் உள்ளமிருக்கிறதே, அது ஓர் எரிமலை! பாபம், எவ்வளவு தொல்லைகள் பட்டவர் தெரியுமா? சேரசோழ பாண்டிய நாடுகளில் இன்றைக்கு இவருக்கு இணையான சிற்பியே கிடையாது. அவ்வளவு திறமை மிக்கவர்! என்ன இருந்து என்ன பயன்? சூழ்ச்சி எனும் பலிபீடத்தில் அவர் பலியிடப் பட்டார்!......"

"சூழ்ச்சிப், பலிபீடமா?"

"ஆமாம்! பிறகு அதனைக் கூறுகிறேன்!"

பேசாது அறையை விட்டு கிழவன் வெளியே சென்றான். கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தான். வீரமணியும் பின் வருவதைக் கண்டதும், ஒரு சிறு வழியினுள் புகுந்து சென்றான்.

மூன்று வாயிற்படிகளைத்தாண்டி ஒரு அறையினுள் வந்து நின்றனர். அந்த அறை, கல் கதவினாலேயே மூடப்பட்டிருந்தது!

"தம்பி, இவ்வளவு நேரமாக உன் பெயரையே நான் கேட்க மறந்து விட்டேன்......"

"தூயமணி என் பெயர்!"

"நல்ல பெயர்! அழகிய பொருள் கொண்ட பெயர்......தம்பி, இதோ இருக்கிறதே இந்த அறைதான், இந்தக் குகை இல்லத்தின் இதயம்! இதனுள் சில அதிசயங்களை நீ காணப்போகிறாய்! இரு அறிஞர்களின் கைத்திறத்தையும் அறிவின் தெளிவையும் நீ பார்த்துப் பரவசப் படப்போகிறாய்! இந்த அறையை ஒருசிற்பியும் ஒரு ரசாயனக்கலவையாளனும் சேர்ந்து பல ஆண்டுகள் முயன்று, முடிவில் அமைத்தனர். சிற்பி உள்ளே இருக்கிறான். ரசாயனக் கலவையாளன் எங்கு சென்றான், என்ன கதியானான் ஒருவருக்கும் தெரியாது!" என்று கூறினான் கிழவன்,

பிறகு, அறையின் முன்பிருந்த ஒரு கல்லை சிரமப்பட்டு நகர்த்தினான். கதவு தானாகத் திறந்து கொண்டது. உள்ளே செல்ல வாயிற்படியில் காலடி எடுத்து வைத்ததும், ஆச்சரியத்தால் தூயமணியின் கண்கள் அகல விரிந்தன! திடீரென்று இரு விளக்குகள் தானாக எரிந்தன! இருண்டிருந்த அறை பிரகாசமாயிற்று.

ஒரு பெரிய மேடை! மேடையின் மீது தங்கத் தகடு போடப்பட்டிருந்தது! தங்கத் தகட்டின்மீது மூன்று மண்டை ஓடுகள் ஒழுங்காக வரிசையாக வைக்கப்பட்டிருந்தன!

காண்பது கனவா என்று தூயமணி எண்ணினான். தன்னைத் தானே தொட்டுப் பார்த்துக் கொண்டான். அவன் நிலையைக் கண்டு கிழவன் சிரித்தான்,

"தம்பி, கனவல்ல, இது உண்மை! முதன் முதல் இந்த அறையைக் கண்டதும் நானும் உன் நிலையைத்தான் அடைந்தேன்..."

"ஐயோ, உள்ளே சிற்பி இருக்கிறார் என்று கூறினீரே, எங்கே காணோம்!"

"இதோ இருக்கிறாரே!"

"எங்கே? எங்கே?"

"இதோ இருக்கும் இந்த மூன்று மண்டை ஓடுகளில், வலதுபுறமிருக்கும் மண்டையோடு தான் சிற்பியின் உடையது......"

தூயமணியின் கைகால்களில் சிறிது அதிர்ச்சி உண்டாயிற்று. அவன் கால்கள் குளிர்ந்து பனிக்கட்டியின் குளிர் நிலைக்கு விரைந்து சென்று கொண்டிருந்தன.

"மற்ற இரு மண்டையோடுகள் யாருடையவை?"

"அதைக் குறித்தும் பிறகு கூறுகிறேன். முதலில் இந்தக் குகை இல்லத்தின் காட்சிகளை மட்டும் பார். அவற்றின் கருத்தையும், விளக்கத்தையும், வேலைப்பாட்டையும், ஆராய்ச்சியின் விளைவையும் குறித்து பிறகு நான் உனக்கு ஓய்வாக உரைக்கிறேன்!"

"தானாக விளக்கு எரிந்தது மட்டுமல்ல, கதவை மூடும் போது இந்த அறை முழுவதும் ஒரே புகையும் நெருப்புமாகிவிடும். பிறகு விளக்குத் தானாக அணைந்து விடும்! — இவற்றைக் குறித்தும் உனக்குச் சொல்கிறேன் பிறகு!"

"ஒரே வியப்பாக இருக்கிறதே!"

"அடுத்த படியாக கோரமான ஒரு அதிசயத்தை நீ காணப்போகிறாய்......வா, போகலாம்"

அறையைவிட்டு வெளியே வந்ததும், பழையபடி அந்தக் கல்லை நகர்த்தினான், கிழவன்! உள்ளே குப்பென்று நெருப்புப் பிடித்து எரிந்தது நன்கு தெரிந்தது!

கதவைச் சரியானபடி பொறுத்தியானதும், கிழவன் வாலிபனைப் பார்த்து இடி இடியென விழுந்து விழுந்து சிரித்தான்!

தூயமணிக்கு ஒன்றுமே புரியவில்லை. சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு பெரிய வாளைக் கிழவன் இழுத்தான். வீசினான்!

தூயமணி "அய்யோ" என்று அலறித் துடிதுடித்துக் கீழே விழுந்தான். அவனது வலது கால் வெட்டுண்டு கீழே துள்ளி குதித்துக் கொண்டிருந்தது! கிழவன் குனிந்து அந்தக் காலை எடுத்தான்! அதனைப் பார்த்துத் திரும்பவும் சிரித்தான்!

(தொடரும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்சொன்ன இலட்சியத்தை அடைவதற்கான சூழ்நிலைமட்டுமே இன்று ஏற்பட்டுள்ளது.

அழுத்தமான தமிழ் உணர்ச்சி; இதுவரை தோன்றாத இடங்களில் இருந்தெல்லாம்கூட திடீர் திடீரென்று தோன்றி வளரும் தமிழ் உணர்ச்சி; புதிய புதிய பத்திரிகைகள்; இதுவரை இருந்ததுபோலன்றி தமிழருக்காகத் **தமிழரால் நடத்தப்படும்** பத்திரிகைகள்; கவர்ச்சியும வனப்பும் நிறைந்த பத்திரிகைகள்; அழகிய பேச்சு மேடைகள், தமிழர் வாழ்வு செழிப்பதற்காகத் தீட்டப்படும் சிறந்த புத்தகங்கள்; சமுதாயக் குறைபாடுகளையும் கொடுமைகளையும் சித்தரிக்கும் கருத்துள்ள நாடகங்கள்; இன்பம் கமழும் தமிழ் இசை; இன்னுமுள்ள அத்தனை துறைகளிலும் இளைஞர்களே நிறைந்துள்ள ரம்மியமான காட்சி-இது இன்றைய சூழ்நிலை; புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்குதற்கேற்ற பக்குவமான சூழ்நிலை.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு புதிய தமிழகத்தைச் சித்தரிக்கவேண்டும் தமிழ் எழுத்தாளர்கள்; திருந்திய தமிழகத்தைக் காணவேண்டும். புரட்சிக் கருத்துகளைத் தமிழர் உள்ளத்தில் எழுப்பும் ஷெல்லிகளாக, வால்ட் விட்மன்களாக, வால்டேர்களாக, மாக்சிம் கார்க்கிகளாக, எச். ஜி. வெல்ஸ் பெர்னார்ட்ஷா போன்ற சிந்தனைச் சிற்பிகளாக அவர்கள் விளங்கவேண்டும்.

விளங்குவார்களா?

இன்று வீசும் தமிழ்த் தென்றலை இலட்சியப் பாதையில் நடந்து செல்லும்போது ஏற்படும் களைப்பை மாற்றும் "டானிக்"காகப் பயன்படுத்திக்கொண்டு மேலும் மேலும் முன்னேறிச் செல்வார்களா?

முன்னேற்றுவார்களா தமிழகத்தை?

அல்லது இன்றைய தென்றலின் இன்பத்தைக் கண்டு மயங்கி இதுவே போதும் என்றிருந்துவிடுவார்களா?

இலக்கிய மறுமலர்ச்சி, ஐந்தாவது கட்டத்தை அடையுமா, அடையாதா?

விடை என்ன என்று என்னைக் கேட்காதீர்கள். அதோ எழுத்தாளர் உலகம்! அதைப் பார்த்துக் கேளுங்கள்.

கேட்க உங்களுக்கு உரிமை உண்டு!

படித்துவிட்டீர்களா?

அறிஞர் அண்ணாதுரை	0	5
ஈரோட்டுப் பாதை	0	6
சித்திரபுத்திரன்	0	6
புதியதோர் உலகு	0	6
பெண்கள் போராட்டம்	0	6
திராவிடஸ்தான் வேண்டாமா	0	8
பெண்கள் புரட்சி	0	14
உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு	0	8
புரோகிதர் ஆட்சி	0	8

பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் சிறுசிறு தரணிகளை ஆண்டுகொண்டிருக்கும் சுல்தான்களோ, பிரிட்டிஷார் ஆட்டும் சுட்டு விரல் கண்டு ஆடிடும் செல்லுலாய்ட் பொம்மைகள்! மலாய்நாட்டில் உள்ள பல்வேறு சமஸ்தானங்களில் ஒன்று சிராங்கூர்! அந்த சிராங்கூர் தனி அரசிலேதான், ஏழைகட்காகப் பாடுபட்ட ஏழைத் தமிழனைத் தூக்கிலேற்றும் கொடுமை நிகழ்ந்திருக்கிறது! பிரிட்டானியம் அந்தக் கொடுமையை நிகழாதபடி தடுத்ததா—இல்லை! அந்தக் கொடுமை அடாது, ஆகாது, தகாது, தமிழர் உள்ளத்தைப் புண்படுத்துவது என்று கூறி கண்டித்ததா—இல்லை! ஏன் இந்த அநீதி புரிகிறீர்—அடுக்குமா இது என்று சிராங்கூர் சுல்தானைக் கேட்டதா—இல்லை! இந்தியாவை காமன்வெல்த் உறுப்பினராக இருக்கும்படி வலை வீசிக் கொண்டிருக்கிறோமே, இந்த நேரமாகப் பார்த்து நீ இந்தக் கொடுஞ் செயலைப் புரிகின்றனையே, இது இந்தியர் உள்ளத்தைக் கூரிய ஈட்டியாலே குத்திக் குடைவது போன்ற காரியம் ஆயிற்றே இதைச் செய்யலாமா நீ என்று அதட்டிக் கேட்டதா ஈவு இரக்கம் அற்ற அந்தக் "காட்டு ராஜா"வை! — இல்லை இல்லை! இளந்தமிழன், இருதயமோ மனிதப் பண்போ இல்லாத ஒரு சுல்தானால் தூக்கில் ஏற்றப்படுவதைக் கண்டும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கைகட்டி, வாய் பொத்தி மௌனமாகத்தான் இருந்தது! மலாய் நாட்டில் இந்திய அரசியலாரின் பிரதிநிதியாக இருக்கும் தோழர் தீவி, பிரிட்டிஷ் ஏஜண்டுகளுக்குப் பல முறை இந்தக் கொடுமையைத் தவிர்க்கும்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறார், சீமையில் இருக்கும் இந்தியப் பிரதிநிதியும் இது குறித்து சீமை சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார், இந்திய சர்க்கார் தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது, தமிழகம் எங்கணும் இந்தத் தூக்குத் தண்டனையை உடனே நீக்கவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, என்றாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அந்த ஏழைத் தமிழனின் உயிரைக் காப்பாற்றத் தவறிவிட்டது! அன்றோர் நாள் வீர வாலிபன் பகத்சிங்கை, இந்தியக் கண்டத்தவர் அனைவரும் துடிக்கத் துடிக்கக் கழுவேற்றிய கயவர் பரம்பரைதானே நாங்கள் என்று கூறுவது போல, இந்நாளைய பிரிட்டிஷ் சர்க்காரும் தமிழ் மகனின் உயிர் தூக்குமேடையில் ஊசலாடுவதைத் தடுக்க மறுத்துவிட்டது.

இந்தியத் துணைக் கண்டத்தின் முதலமைச்சர் பண்டித நேரு, சீமையில், பிரிட்டிஷ் குடும்பம் என்று பெருமிதமாக அழைக்கப்படும் காமன்வெல்த் கூட்டுறவில் இருக்கச் சம்மதித்து, ஒப்புதல் நாளில் தன் கையெழுத்தைப் பொறிக்கும் அதே நாளில் தான், அதே வேளையில்தான், அந்த விநாடியில் தான், இங்கே, மலேயாவில், கோலாலம்பூர் நகரில், இளந் தமிழன் கணபதி—ஆம்! அதுதான் அந்த வீர இளைஞனின் பெயர்—தூக்கு மேடையில் ஏற்றப்பட்டு மரணபுரிக்கு அனுப்பப்பட்டு விட்டான்!

ஆசையும் நேசமும் ஆநந்தமும் அங்கே! துரோகமும் கொடுமையும் நெஞ்சிரக்க மற்ற தன்மையும் இங்கே!

புன் சிரிப்பு—சீமையில்! விஷம் கக்கல்—மலாயில்!

கைகுலுக்கிப் பேசி களிப்புடன் உலவும் காட்சி—சீமையில்! இழுத்துப் பறித்து மரணத்தை முத்தமிடச் செய்யும் சோக சித்திரம்—மலாயில்!

நாம் எல்லாம் ஒன்றல்லவா—ஒரு குடும்பத்தில் இருக்கவேண்டியவர்கள் அல்லவா—நாம் பிரிந்து போகலாமா—இது நீதியா, முறையா—ஆகுமா இந்தப் போக்கு—இந்த உபசார மொழியும் சாகச வார்த்தையும் சீமையில்! உனக்கென்ன இவ்வளவு திமிரா, வெள்ளை முதலாளிகளையா எதிர்த்து 'முகாம்' அமைத்தாய், செய்யலாமா நீ, ஏடா கறுப்பா இது ஆகுமா உனக்கு, வா தூக்கு மேடைக்கு, வா! வா! வந்து சாவு! இது, மலாய் நாட்டில்!

ஆம்! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சீமையில், பண்டித நேருவுடன் விருந்தருந்தி, களிப்புடன் நேச ஒப்பந்தம் தயாரித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான், இங்கே, மலாய் நாட்டில் பிரிட்டிஷ்—இந்திய உறவுக்கு மரண ஓலை தயாரிப்பதுபோல, இளைஞன் கணபதிக்குத் தூக்குத் தண்டனை கொடுத்திடும் தெள்ளறிவு அற்ற சுல்தானுக்குத் "ததாஸ்து" கூறிக் கொண்டிருந்தது. இவ்வளவு வெளிப்படையாகத் தெரிகின்றன பிரிட்டனின் நயவஞ்சகமும் நச்சு நினைப்பும் என்றாலும் நேரு, இத்தகு பிரிட்டனுடுதான் கூட்டுக் குடும்பம் நடத்தப் போகிறாராம்! கணபதியின் கோரக் கொலைக்குப் பிறகுங்கூட, கொக்கரிப்புடன் கூறுகிறார் பண்டிதர் காமன்வெல்தில் இருக்கத்தான் வேண்டும் என்று! ஏன்? ஒரு கணபதி தூக்குமேடையில் தொங்கியது போதாதென்றா? இன்னமும் நம்மிடமிருக்கும் கணபதிகளைத் தூக்குமேடைக்கு அனுப்புவதற்காகவா?

"காமன்வெல்த் மாநாட்டின் நல் விளைவுகளை இக்கோர நிகழ்ச்சி பாழாக்கிவிட்டது" என்று மனம் கசிந்து கூறி இருக்கிறார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர்! ஆனால் அகில இந்திய தலைவர், நேருவோ, இக்கோர நிகழ்ச்சியைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி 'ஆடுவமே பள்ளுப் பாடுவமே, காமன் வெல்தில் என்றென்றும் இருப்போம் என்று ஆநந்தத்தாண்டவம் ஆடுவமே' என்று கிண்கிணி கீதம் இசைக்கிறார்—இது நியாயமா? கட்டிளங்காளை கணபதியின் மரணத்தைக் கண்டபிறகும் கூட காமன்வெல்தில் இனியும் இருப்பது கடைந்தெடுத்த பேதமை என்ற அறிவுத் தெளிவு ஏன் பண்டித நேருவுக்கு ஏற்படவில்லை? இதோ நாம் வீரத் தமிழனை இழந்து நிற்கிறோம், நம் அருமைக் கணபதியா மாண்டு போனான் என்று கூறிக் கூறி கண்களில் பெருக்குகிறோம் நீர் அருவி, அந்தோ இது கொடுமை தாங்கரிய கொடுமை என்று தள்ளரிய துக்கத்தால் வார்த்தை பல சொல்லிச் சொல்லிப் புலம்புகிறது நம் நெஞ்சம், துன்பத்தைக் கொஞ்சம் சுவை பார்க்கப் போகின்றேன் இன்பத்தை என்னிடத்தில் நீட்டாதீர் போய்விடுங்கள் என்று கூறிய வண்ணம் கண்ணீரும் கம்பலையுமாக உலவுகின்றனர் மலாய்வாழ் தமிழர்கள், கணபதியே, நம் அருமைத் தலைவனே, நமது ஒப்பற்ற வழிகாட்டியே, நமது இனிய தோழனே மாண்டு போனானே, மாள வைத்ததே ஏகாதிபத்தியம், இனி நமக்கு வாழ்வு ஏது என்று எண்ணி எண்ணி ஏக்கம் மிகக் கொண்டு அந்த மலாய் தமிழர்கள் ஒவ்வொருவரும் ஒரு சோக சித்திரமாகவே மாறிவிட்டனர், இந்த கோரச் செய்தியை இதழ்களிலே காணும்போது, அந்தோ நமது

[12-ம் பக்கம் பார்க்க]

தொடர்கதை:

இரண்டாம் பகுதி

மூன்று மண்டை ஓடுகள்!

கிழவனும் தூயமணியும் சிறிது தூரம் பேசாமல் நடந்து சென்றனர். கல்லாதவன் உள்ளத்தைப் போல கரடும் முரடுமான பாதையில் அவர்கள் போய்க் கொண்டிருந்தனர்!

முன் சென்ற கிழவன் திடீரென்று நின்றான். வீரன் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"தம்பி, இதோ தெரிகிறது பார் மலை, அதனைத் தாண்டிதான் நான் இருக்கும் இல்லமிருக்கிறது" என்று கிழவன் கூறிவிட்டுக் கீழே உட்கார்ந்தான்.

"ஐயா, விரைவாகச் சென்றால்...
..............."

"விரைவாகச் செல்லலாம் ஆனால் ஒரு தடை இருக்கிறது!"

"தடையா? அது என்ன? சொல்லுங்கள், ஐயா!"

"பிரமாதமாக ஒன்றுமில்லை! நான் உன்னைக் குருடனாக்கப் போகிறேன்—தடையில்லையே? என்ன சொல்லுகிறாய்?"

"என்னையா குருடனாக்கப் போகிறீர்?—மிக்க மகிழ்ச்சி! செய்ய வேண்டுமென்று பல நாள் நினைத்து, தைரியம் வராமல் விடுத்த செயல் இது! கண்கள் இருக்கின்றனவே அவைகளால் மன அமைதியே பாழ்படுகின்றது! சொல்ல முடியாத வேதனையால் எத்தனை நாட்கள் நினைத்தது உண்டு தெரியுமா, இந்தப் பொல்லாத இரு கண்களையும் ஒரேயடியாகப் பிடுங்கி எடுத்துவிட வேண்டுமென்று............"

"என் பேச்சைக் கேட்டு நீ ஆச்சரியப்படுவாய், அலறித் துடிப்பாய் என்றெல்லாம் நான் எண்ணினேன். ஆனால் வியப்பும் அச்சமும் நான் அடையும்படி நீ பேசுகிறாயே! ஈதென்னப்பா வேடிக்கை?"

"வேடிக்கையல்ல பெரியவரே, வேடிக்கையல்ல! ஆபத்தான சஞ்சலத்தை உண்டாக்குகின்ற, இந்த இரு கண்களால் நானடைந்த வேதனையைச் சொல்ல முடியாது......"

"ஓகோ அப்படியா? நீ என்ன பேசுகிறாய் என்பதை ஒரு விதமாகப் புரிந்துகொண்டேன்...நான் இப்பொழுது உன்னைக் குருடனாக்கலாமல்லவா?"

"தடையேது! குருடனாக்கி விடுங்கள்—ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் எனக்கு உறுதியளியுங்கள்!"

"அது என்னப்பா?"

"குருடனானதும் என்னைச் சேரனின் தலைநகரத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடவேண்டும்!"

"சரி, அப்படியே செய்கிறேன்! கண்களை மூடிக்கொள்!"

தூயமணி கண்களை மூடிக் கொண்டான்! மூடிய கண்ணிமையை விலக்கிக் கொண்டு கண்ணீர்த் துளிகள் வெளியே ஓடி வந்தன!

கிழவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, தன் மேல் துணியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"விரைவாகக் குத்திவிடுங்கள்!" என்று தூயமணி அவசரப்படுத்தினான்.

"இதோ ஒரு நொடியில் காரியத்தை முடித்து விடுகிறேன்." என்று கூறிக்கொண்டே, கிழவன் துணியால் அவன் கண்களை இறுகக் கட்டினான்!

"இது என்ன?"—உணர்ச்சியற்ற குரலில் கேட்டான் வீரன்.

"என்ன தம்பி, உன் கண்களைக் குத்திப் பிடுங்கி, குருடனாக்குமளவிற்கு ஈவு இரக்கமற்ற இரும்பு நெஞ்சன் என்று என்னை எண்ணிக் கொண்டாய்? என் முகத்தைப் படித்துப் பார்த்து இதனைத் தான் நீ தெரிந்து கொண்டாயா?"

இளைஞன் சிரித்துவிட்டு, "பின் பேன் கண்களைக் கட்டிவிட்டீர்?" என்று கேட்டான்.

"என் இல்லத்திற்குச் செல்வதற்காக......அங்கு சென்றதும் கட்டை அவிழ்த்து விடுகிறேன்... அங்குள்ளவற்றை நீ காணலாம்—கருத்தில் ஏதாகிலும் கலக்கமிருந்தால் தெளிவு பெறலாம்......சரி, புறப்படலாமா?"

இருவரும் புறப்பட்டனர். மலை மீது ஏறினர். வளைந்து வளைந்து சென்றனர். ஏதோ ஒரு சுரங்கத்தினுள் நுழைந்து செல்வதாகத் தூயமணிக்குத் தோன்றியது. அந்தச் சுரங்கத்தில் சிறிது தூரம் மிகக் குளிர்ச்சியாகவும் சிறிது தூரம் மிகவும் சூடாகவும்—இப்படி வெப்பநிலை மாறி மாறி இருந்தது! காலில் சிறு சிறு கற்கள் தென்பட்டன. மாலைக் கதிரவனின் வெய்யில் தேகம் முழுவதும் படுவது தூயமணியால் நன்றாக உணர முடிந்தது! சுரங்கத்தை விட்டு வெளியே வந்து விட்டதாகத் தூயமணி நினைத்தான்.

"குனிந்து வா, தம்பி" என்று கிழவன் கூறியதும், வீரன் குனிந்து நடந்தான்.

"இப்பொழுது நீ நிமிர்ந்து நிற்கலாம் ஆனால் நீ முன்புறத்தில் ஒரு அடிகூட எடுத்து வைக்கக்கூடாது, தெரிகிறதா? நான் சிறிது நேரத்தில் திரும்பி வருகிறேன்! அது வரைக்கும் ஆடாது அசையாது இப்படியே நிமிர்ந்து நின்று கொண்டிருக்க வேண்டும்! தம்பி, என் எச்சரிக்கையின் ஒவ்வொரு சொல்லுக்கும் நிறைய பொருள் உண்டு. ஒன்றைக்கூட நீ மறக்கவோ, உதாசீனம் செய்யவோ கூடாது! மறந்துவிட்டாயோ— நீ சேரநாடு செல்லமாட்டாய், மரணபுரிக்கு நேரடியாகச் சென்று விடுவாய்........"

(8-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உடன் பிறந்த தோழர்கள்—தமிழர்கள் தமிழ்நாட்டுச் சேய்கள்—தமிழகம் பெற்றெடுத்த காளைகள் இங்கே பிழைக்க வழியின்றிச் சென்றார்களே—சென்றவிடத்திலும் இப்படி நாளும் நாளும் மரணத்தின் நிழலுக்கு அஞ்சி அஞ்சியா அவர்கள் வாழவேண்டும்—ஏன் இந்தக் கொடுமை—இன்னும் எத்தனை நாளுக்கு இந்தக் கோராமை என்று கதறிக் கதறி அழுகிறோம் நாம், நம் உள்ளமோ வேதனைக் கூடமாக இருக்கிறது, நம் குருதியோ கொதிக்கிறது இளந் தமிழ்த் தலைவனுக்குத் தரப்பட்ட கொடிய தண்டனையைக் கேட்டு, நம் தோள்களோ துடிக்கின்றன நிரபராதிக்கு தூக்குத் தண்டனையை விதிக்கும் கல்நெஞ்சக் கயவர்கள் இன்னம் உலவுகிறார்கள் உயிருடன் என்பதைக் கேட்டு, இத்தகு நேரமாகப்பார்த்து பண்டிதர், பதட்டமின்றி கூறுகிறார் காமன்வெல்த்தில் இருக்கத்தான் வேண்டும் என்று! எந்தக் காமன்வெல்த், கணபதியின் கோர மரணத்தைத் தடுக்க தன் சுண்டுவிரலையும் அசைக்கவில்லையோ, எந்தக் காமன்வெல்த்; தூயோன் கணபதி தூக்குமேடை ஏறியது கேட்டு ஒரு சொட்டு கண்ணீரும் சிந்தவில்லையோ, எந்தக் காமன்வெல்தில் இருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தக் கோரக் கொலைக்குத் தோன்றாத் துணையாகவும், ஆசீர்வாதம் புரிந்தருளும் ஆசானாகவும் இருந்ததோ, அதே காமன்வெல்தைத்தான். அவசர அவசரமாக ஆதரித்துப் பேசுகிறார் பண்டிதர்! கணபதியைப் பறிகொடுத்து ஏங்கித் தவிக்கும் தமிழருக்கு இவர் கூறும் ஆறுதல் மொழி இதுபோலும்! அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பட்டாபி அழகாகக் கூறி இருக்கிறார், "கணபதிக்கு விதிக்கப் பட்ட மரண தண்டனை, காமன்வெல்த் என்னும் மாயையில் நாம் அதிகமாக மயங்கி விடக்கூடாது என்பதற்கு ஓர் அரிய எச்சரிக்கை" என்று! "காமன்வெல்தில் இந்தியா இருப்பதைக் குறித்து இந்திய மக்கள் மகிழ்ச்சியடையவில்லை என்று நான் முன்பு கூறினேன். என்னை அப்போது பலர் கேலி செய்தார்கள். அன்று நான் கூறியது எவ்வளவு உண்மை என்பது கணபதிக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையிலிருந்து இப்போது தெள்ளத் தெளிய விளங்கிவிட்டது" என்றும் பட்டாபி கூறியிருக்கிறார்! உண்மையே அவர் உரை! அவர் மட்டுமல்ல, நாமும் இந்தியாவைக் காமன்வெல்திலே பிணைத்துவிட்டார் பண்டிதர் என்ற சேதி நம் செவியிலே வந்து புகுந்தவுடனே அதையேதான் கூறினோம் நம்மையும்தான் கேலி செய்தனர் நம்ம சர்க்காரைக் குறை கூறும் குருட்டறிவாளர்கள் என்று ஆனால் இதோ, கணபதியின் கழுத்தை முத்தமிட்ட தூக்குக் கயிறு உலகுக்கெல்லாம் உரத்த குரலில் உணர்த்திடுகின்றதே நாம்கூறியது அவ்வளவும் உண்மை உண்மை என்று! என்றாலும பண்டிதர் காமன்வெல்திலே தொடர்ந்து இருக்கப் போகிறாராமே, கூறுகிறாரே கூச்சமின்றி, ஏன் இந்தப் போக்கு கொள்கிறார் இந்தியாவின் பிரதமர், ஏன் இந்த ஆகாவழிச் செல்கிறார், ஏன்? வேதனை நிரம்பிய உள்ளத்தோடு கேட்கிறோம், இளந்தமிழன் கணபதியைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் துக்கத்தோடு துக்கமாகக் கேட்கிறோம், கண்ணீரிலே கணபதியை நீராட்டிவிட்டுக் கேட்கிறோம், புரியாத காரணத்தால்தான் கேட்கிறோம், ஏன்?

* * *

கணபதி மாண்டுவிட்டான்! மரணக் கள்ளன் அந்த அழகு மலரைப் பறித்துக் கொண்டோடி விட்டான்! தூக்குமேடை அந்தத் தூயோனின் உயிரைக் குடித்து முடித்து விட்டது! இறப்பு எனும் இருள் அந்த உதய சூரியனைக் கவ்விக் கொண்டு மறைந்துவிட்டது! அந்த அரிய ஓவியம் அடியோடு துடைக்கப்பட்டு விட்டது! இனி கணபதி திரும்பிவர மாட்டான்! தமிழகம் கண்ணீர் சிந்தினாலும் அவன் வர மாட்டான், நாம் கதறிக் கதறி அழுதாலும் அவன் வரமாட்டான் நாம் புரண்டு புரண்டு அழுதாலும் அந்த வீர இளைஞனை இனி உயிருடன் காண்பது என்பது நடவாத செயல்! ஆம்! கணபதியை நம்மிலிருந்து என்றென்றும் மீண்டு வர முடியாதபடி பிரித்தெடுத்து விட்டார்கள்! கணபதி மாண்டுவிட்டான்!

கணபதி மாண்டுவிட்டான் ஆனால் மாண்ட கணபதிக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு ஒன்று இருக்கிறது! இதோ, மலாய் நாட்டில், மற்றொரு தமிழ்நாட்டான், **சாம்பசிவம்** என்னும் பெயருடையான், கணபதி எந்தக் காரணத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டானோ அதே காரணத்திற்காக, தற்காப்புக்காக ஒரு துப்பாக்கியை வைத்திருந்த காரணத்திற்காக, மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான்! மரணம் அழைக்கிறது மறுபடியும் ஒரு தென்னாட்டானை! விரைவில் தூக்குமேடை ஏற இருக்கிறான் சாம்பசிவம்! கணபதியின் உயிரைப் பறித்த கள்ளர்கள் சாம்பசிவத்தின் உயிரையும் குடித்துத் தம் இரத்தப் பசியை ஆற்றிக் கொள்ளத் தயார் கூறி நிற்கின்றனர்! மலாய் வழக்கு மன்றத்திலே சாம்பசிவம் நிறுத்தப்பட்டபோது அவன் குற்றமற்றவன், நிரபராதி, "அவன் விடுதலை செய்யப்படவேண்டியவன் என்று ஜூரிகள் அத்தனைபேரும் கூறினர் என்றாலும் மலாய் சர்க்கார் அவனைத் தூக்கிலேற்றித் தான இருக்கிறது! ஒரு நிரபராதியைத் தூக்கில் ஏற்றுவது காட்டுமிராண்டிகளும் செய்ய அஞ்சும் கொடுஞ்செயல்! ஆனால் அந்தக் கொடுஞ்செயலைத்தான் நவநாகரிக சர்க்கார் என்று பொக்கம் பேசிக் கொள்ளும் பிரிட்டனின் மேலாதிக்கத்தில் இருக்கும் மலாய் சர்க்கார் செய்ய இருக்கிறது! கணபதியைக் காப்பாற்றத் தவறிய நாம் சாம்பசிவத்தையாவது காப்பாற்றியாக வேண்டும்! முன்னே போதிய கவலை எடுத்துக்கொண்டு கணபதியை மரணத்தின் வாயிலிருந்து மீட்கத் தவறிய இந்திய சர்க்கார் இம்முறை உடனே சாம்பசிவத்தின் உயிரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டாக வேண்டும்! இம்முறையும் டில்லி சர்க்கார், ஏனோ தானோ என்று இருந்து விடுவார்களானால், நாம் முன்கூட்டியே எச்சரித்துக்கூற விரும்புகிறோம், பிறகும்கூட, தமிழகம், இந்திய சர்க்காரை மன்னிக்கும் என்று எதிர்பார்ப்பது பேதமை!

மரணம் அழைக்கிறது மறுபடியும்! இம் முறையேனும் மரணத்தை அதன் நிழல் சாம்பசிவத்தின்மீது விழாவண்ணம் விரட்டி அடிப்போமாக!

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)